மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. என்.ஆர். இராஜேந்திரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

47—

வீராணம் ஏரி விரிவாக்கத் திட்டம்

*88152—திரு. என்.ஆர். இராஜேந்திரன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீராணம் ஏரி விரிவாக்கத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலக வங்கி நிதி உதவியுடன் இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான புதிய வீராணம் திட்டப் பணிகள் வரும் நிதியாண்டில் (1996-97) செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. என்.ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் கூடிய கழக மாநாட்டை முறியடிக்க இன்னொரு மாநாடு கூட்ட வேண்டுமெனில், அதை தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒருவரால்தான் முடியும். அதேபோல், வீராணம் திட்டம் போன்ற மாபெரும் திட்டங்களைத் தீட்டவோ, செயல்படுத்தவோ இந்தக் கழக அரசால்தான் முடியும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி. 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கு ஏற்ப, ஆடி மாதம் விதைக்கக்கூடிய அளவுக்கு காவிரியில் தண்ணீர் திறந்துவிட்ட காரணத்தினால்தான் இருபோக நெல் விளைச்சலும், உளுந்து பயிரும் எங்கள் பகுதியில் 5 ஆண்டுகளாக சிறந்த மகசூலை விவசாயிகள் காண முடிந்தது. இந்த வீராணம் விரிவாக்கத் திட்டப் பணி நடைபெறக்கூடிய ஏரியிலும், வடகால் ஆற்றிலும் தற்போது நீர் நிறைந்து காணப்படுகிறது. அடுத்த நீர் வரத்து ஜூன் மாதத்தில் இருந்தால்தான் பழையபடி விவசாயம் நன்றாய் நடைபெறும். அதேநேரத்தில் கோடைப் பருவம் 3 மாதங்களே ஆகும். இந்த 3 மாதத்தில் பணி நடக்கக்கூடிய அளவிற்கு துரிதமாக வேலை துவக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக வடகால்வாய் சீரமைப்பதற்காக டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு, ஜனவரி மாதத்தில் டெண்டர்கள் வரப்பெற்று இருக்கின்றன. அது சம்பந்தமாக வீராணம் ஏரியினுடைய கரையை உயர்த்தி கொள்ளளவை அதிகப்படுத்துவதற்கான திட்டமும் ஆய்விலே இருக்கிறது. அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவிலே ஒப்பந்தங்கள் கோரப்பட இருக்கின்றன. அதனுடைய கொள்ளளவை உயர்த்துவதற்கான ஒப்பந்தங்கள் விரைவிலே கோரப்படும். மற்றும் அந்தக் கால்வாய்கள் சீரமைப்பது, கேட்ச்மென்ட் ஏரியாவிலிருந்து வருகின்ற, தண்ணீர் வருகின்ற பகுதியில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை எல்லாம் அப்புறப்படுத்துவது. இதுபோன்ற பணிகள் எல்லாம் அந்த ஏரியைச் சீரமைப்பதற்காக பல்வேறு திட்டங்களை பொதுப்பணித்துறை மூலம் செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து இருக்கின்றோம். ஆகவே, உலக வங்கித் திட்டம் நிறைவேறுகின்றபோது-அதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில்-அந்த வீராணம் ஏரி புதிய பொலிவுடன் இன்னும் சில காலங்களிலே திகழும் என்று மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவிலே அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. என்.ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் தண்ணீர் சென்னைக்கு குடிநீராக வருவதால் அந்தப் பகுதிக்கு எந்தப் பாதிப்பும் இருக்க முடியாது. இது நமக்கு தன்மான உணர்வுள்ள தன்னிறைவுத் திட்டமாகும். மழைக்காலங்களில் 2 மாதங்கள் கொள்ளிடத்தில் அணைக்கரையில் திறந்துவிடப்படும் உபரி நீரையும், 4 மாதங்கள் உப்பனாற்றில் திறந்துவிடப்படும் உபரி நீரையும் சென்னைக்குக் கொண்டுவந்தால் போதும்; குடிநீர்ப் பஞ்சமே இராது. அதை வீராணம் ஏரி வழியாகத்தான் சென்னைக்குக் கொண்டுவர முடியும். அந்தப் பகுதி விவசாயிகளுக்கு இதில் பெருத்த லாபம் உள்ளது. ஆகவே, சென்னைக்கு விரைவாக தண்ணீர் கிடைக்கும் பொருட்டும் எங்கள் பகுதியில் அடுத்த ஆண்டு விவசாயம் பாதிக்காத அளவிற்கும் விரைவாக தண்ணீர் கிடைக்கும்பொருட்டும், ஆண்டுகள் தள்ளத்தள்ள திட்டச் செலவுகள் கூடுகின்ற காரணத்தாலும், இந்த கோடை ஆண்டே அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக 60 கோடிக்கு மேலே திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. பாசனப் பகுதியைப் பொறுத்தவரையிலே,

வீராணம் ஏரியினுடைய கொள்ளளவு 930 மில்லியன் கன அடி. நாம் போட்டு இருக்கிற திட்டத்தின் மூலம் 1,485 மில்லியன் கன அடிக்கு தண்ணீரைக் கொள்கின்ற அளவுக்கு அந்த ஏரியினுடைய தரத்தை உயர்த்த இருக்கின்றோம். ஆகவே, விவசாயத்திற்கு தண்ணீர்ப் பற்றாக்குறை வருவதற்கு வாய்ப்பு இல்லை. குடிநீர் கொடுத்தாலும்கூட அங்கு இருக்கின்ற அனைத்து விளை நிலங்களும் விளைகின்ற அளவுக்கு தண்ணீர் கொள்ளளவை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கின்றோம். ஆகவே, சென்னைக்குக் குடிநீர் விடுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அங்கே இருக்கின்ற விவசாய விளை நிலங்களுக்கும் தண்ணீர்ப் பற்றாக்குறை இல்லாமல் பாசனம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படாது. இந்தத் திட்டம் விரைவிலே எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான நடைமுறைத் திட்டங்களும் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன; ஒப்பந்தங்களும் கோரப்பட்டு இருக்கின்றன; விரைவிலே முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. டி. வேலையா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

48—

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி வீடுகள்

23774—திரு. டி. வேலையா:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி டவுன் தெற்கு மவுண்ட் ரோடு பகுதியில் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்ட அருந்ததிய இன துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குடியிருக்க அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி தெற்கு மவுண்ட்ரோடு பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் மேற்கொள்ள உரிய நிலம் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் துவக்கப்படும்.